Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM .

Case No. **CC No. 24/2025**
**P.W**. 1 (LW1)

| | |
|---|---|
| Name | : திரு.மூர்த்தி |
| Father/Husband Name | : திரு. மாரிமுத்து |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.11.2025

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது கானத்தூர் கிராமத்தில் குடியிருந்து Sea Villa Resort–ல் மேனேஜராக வேலை செய்து வருகிறேன். சாட்சி நிர்மலா என்னுடைய மனைவி ஆவார். சாட்சி கோகுலகண்ணன் எனது மகன் ஆவார்.

2) கடந்த 23.09.2024 ம் தேதி எங்கள் பீரோவில் 2–1/2 சவரன் செயின் டாலருடன், ½ சவரன் கம்மல் ஆக மொத்தம் 3 சவரன் நகை பீரோவில் வைத்து பூட்டி விட்டு ஒரு விழாவிற்காக சென்றுவிட்டோம். 28.09.2024 ம் தேதி பீரோவை திறந்து பார்த்தபோது மேற்சொன்ன நகைகள் காணாமல் போயிருந்தது. அக்கம் பக்கத்தில் விசாரித்தபோது ஆஜர் எதிரி என் வீட்டருகே வந்து போனதாக சொன்னதன் பேரில் அவர் மீது சந்தேகப்பட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்த புகார் ஆகும். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது)** கடந்த 6.11.2024ம் தேதி போலிசார் நகையை கண்டுபிடித்துவிட்டதாக என்னை அழைத்து விசாரணை செய்தார்கள். அப்போது ஆஜர் எதிரி ரவீந்திரன் அப்போது காவல் நிலையத்தில் இருந்தார். அவர் மீது வழக்கு பதியப்பட்டுள்ளதாக போலிசார் சொன்னார்கள். 7.11.2024ம் தேதி காணாமல் போன நகையை கண்டுபிடித்துவிட்டதாக சொன்னார்கள். என்னுடைய நகையை நான் அடையாளம் காட்டினேன். என்னுடைய நகையை நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக் கொண்டேன். நான் பெற்றுக் கொண்ட நகை தற்போது நீதிமன்றத்தில் ஆஜர் செய்து திரும்பி பெற்றுக் கொள்கிறேன். **(அந்த நகை அ.சா.பொ.1 வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM .

Case No. **CC No. 24/2025**
**P.W**. 2 (LW2)

| | |
|---|---|
| Name | : திருமதி. நிர்மலா |
| Father/Husband Name | : திரு. மூர்த்தி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.11.2025

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது கானத்தூர் கிராமத்தில் குடியிருந்து பாத்திரக்கடையில் வேலை செய்து வருகிறேன். சாட்சி மூர்த்தி என்னுடைய கணவர் ஆவார். சாட்சி கோகுலகண்ணன் எனது மகன் ஆவார்.

2) கடந்த 23.09.2024 ம் தேதி இரவு 9.00 மணியளவில் எங்கள் பீரோவில் 2–1/2 சவரன் செயின் டாலருடன், ½ சவரன் கம்மல் ஆக மொத்தம் 3 சவரன் நகை பீரோவில் வைத்து பூட்டி இருந்தேன். ஒரு விழாவிற்கு செல்வதற்காக கடந்த 28.09.2024 ம் தேதி நகைகளை எடுப்பதற்காக பீரோவை திறந்து பார்த்தபோது மேற்சொன்ன நகைகள் காணாமல் போயிருந்தது. அக்கம் பக்கத்தில் விசாரித்தபோது ஆஜர் எதிரி என் வீட்டருகே வந்து போனதாக சொன்னதன் பேரில் அவர் மீது சந்தேகப்பட்டு காவல் நிலையத்தில் என் கணவர் புகார் கொடுத்தார். போலிசார் என்னை

விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.